**சார்பு நீதிமன்றம், ஒட்டன்சத்திரம்**
MACOP.No. 356 / 2022

**ம.சா.1. சிவசங்கர்** **07.02.2024**

**சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு 1-ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் கண்டுள்ள விபரங்கள் அனைத்தும் எனக்கு முழுமையாக தெரியும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களின் அடிப்படையில் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையை இருவாகனத்திற்கும் பெற்றேனா அல்லது ஒரு வாகனத்திற்கு மட்டும் பெற்றேனா என்றால் இருவாகனங்களுக்கும் வாங்கினேன். ஆனால் நான் எனது வாகனத்திற்குரிய மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றும் பேருந்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை ம.சா.ஆ.12 காலம் நம்பர் 12-ல் எனது வாகனத்திற்கு முன்பக்கம் மட்டும் சேதம் அடைந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பின்பகுதியில் எனது வாகனத்திற்கு எந்தவித சேதாரமும் ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் பின்பகுதியில் வாகனம் மோதி முன்பகுதி மோதி தான் இடித்தது. அந்த பேருந்து முன்பகுதியில் எந்தவித சேதாரமும் இல்லை என்று தான் மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. பேருந்திற்கு எந்தவித சேதாரமும் ஏற்படவில்லை என்றும் நான் தான் இருசக்கர வாகனத்தில் சென்று கீழே விழுந்துவிட்டேன் என்றும் அதனால் அந்த பேருந்து எனது இருசக்கர வாகனத்தில் மோதி விபத்தை ஏற்படுத்தவில்லை என்று சொன்னால் தவறு. அதன் காரணமாக தான் பேருந்திற்கான மோட்டார் வாகன ஆய்வாளரின் அறிக்கை பெற்றும் அதை மறைப்பதற்காக தான் நான் அந்த அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த விபத்து என்னுடைய கவனக்குறைவால் ஏற்பட்டது என்றும் பேருந்து இந்த விபத்தில் சம்மந்தப்படவில்லை என்றும் அதனால் தான் எனது இருசக்கர வாகனத்திற்கு முன்பக்கம் சேதாரம் ஏற்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. 01.12.2021 தேதியில் இருந்து 22.12.2021 வரை கோவை மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சை எடுத்து வந்தேன் என்றால் சரிதான். எனக்கு இரத்தத்தில் உள்ள சக்கரையின் அளவு உணவு சாப்பிடாமல் 165 இருந்ததாகவும் உணவு சாப்பிடபிறகு 300 இருந்ததாகவும் எனது மருத்துவ விடுப்பு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று சொன்னால் எனக்கு சுகர் எப்போதும் இருந்ததில்லை. நான் மருத்துவமனையில் அவசர சிகிச்சை பிரிவில் உள்நோயாளியாக இருந்ததால் தான் எனது இரத்தத்தில் உள்ள சக்கரையின் அளவு கூடிவிட்டது. விபத்துக்கு முன்பு எனக்கு உள்ள சக்கரை அளவு குறித்து ஆதாரம் எதுவும்

நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு சக்கரை வியாதி இல்லாததால் நான் தாக்கல் செய்யவில்லை. எனது மருத்துவ விடுப்பு சான்றில் எனக்கு பார்வை குறைபாடு இருப்பதாக அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சொல்லவில்லை. ஆனால் சி.டி.ஸ்கேன் அறிக்கையில் இருக்கிறது. சி.டி.ஸ்கேன் அறிக்கையில் எந்த இடத்தில் எனக்கு கண் பார்வை குறைபாடு உள்ளதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் என்னிடம் காட்டப்படும் ம.சா.ஆ.9 ஆவணம் எனது கண்ணிற்காக எடுக்கப்பட்ட மருத்துவ அறிக்கை. ஆனால் சி.டி.ஸ்கேன் ம.சா.ஆ.6-ல் எனக்கு கண்ணில் பாதிப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்படவில்லை. 12.01.2021-ல் இருந்து 17.06.2021 வரை நான் கண்சிகிச்சை எடுத்து கொண்டது குறித்து நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான்எனது கண்ணிற்கு ஆயுர்வேத சிகிச்சையும் ஆங்கில சிகிச்சையும் கலந்து கலந்து பார்த்தேன் என்றால் நான் முதலில் ஆங்கில மருத்துவம் பார்த்தேன். ஆனால் தற்போது 6 மாதத்திற்கு பிறகு ஆயுர்வேத மருத்துவம் பார்த்து வருகிறேன். கடைசியாக ஆயுர்வேத மருத்துவம் எந்த மாதம் எடுத்துக் கொண்டேன் என்றால் 22.12.2022-ல் இருந்து 05.01.2023 வரை நான் சிகிச்சை எடுத்துக் கொண்டேன். அதற்கு பின்னிட்டு அந்த மருத்துவம் பார்த்ததிற்கு நான் ஏதேனும் ஆவணம் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ஆனால் மருந்து சாப்பிட்டு கொண்டு இருக்கிறேன். நான் சில்லறையில் வியாபாரம் செய்வதற்கு அரசு உணவு பாதுகாப்பில் இருந்து எனக்கு வழங்கப்பட்ட சான்று ம.சா.ஆ.10 இது ஒவ்வொரு ஆண்டும் இந்த அனுமதி புதுப்பிக்கப்பட வேண்டம் என்றால் சரிதான். 2021 முதல் 2024 அக்டோபர் மாதம் வரை தொடர்ந்து புதுப்பித்து வருகிறேன் என்றால் சரிதான். 24.10.2024 வரை ம.சா.ஆ.10 உணவு பாதுகாப்பு துறையில் இருந்து எனக்கு வழங்கப்பட்ட அனுமதி என்றால் எனக்கு இதுபற்றி தெரியாது. எனது தம்பியை கேட்டால் தான் தெரியும். ம.சா.ஆ.10 ஆவணம் என் பெயரில் தான் உள்ளது என்றும் எனது தம்பி பெயரில் இல்லை என்றால் சரிதான். 2021-ம் வருடத்திற்கு பின்பு அந்த கடையை நடத்த முடியவில்லை என்று ஏதேனும் ரத்து கடிதம் எதுவும் உணவு பாதுகாப்பு துறையில் இருந்து பெற்று நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வருமான வரி செலுத்தக்கூடிய நபர் என்றால் சரிதான். இந்த விபத்திற்கு பின்னிட்டு 2021-2022க்கான அசஸ்மெண்ட் வருடத்திற்கான 24.02.2022-ல் நான் வருமான வரி கணக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது விபத்திற்கு பின்னிட்டு ரூ.4,99,720 மொத்த வருமானம் வருவதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். விவசாய வருமானம் இன்று வரை எனது பொறுப்பில் இருந்து வருகிறது என்றால் தற்போது என்னிடம் இல்லை. எனது அப்பாவிடம் உள்ளது. விபத்துக்கு முன்பு நான் தான் பார்த்து வந்தேன். விபத்துக்கு முன்பு நான் தான் விவசாய பொறுப்பை பார்த்து வந்தேன் என்பதற்கும் எங்களுக்கு விவசாய பூமி இருந்ததற்கும் ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 2021-2022,

2023-2024 வருடங்களுக்கான வருமானம் எனக்கு இல்ல என்றும் அதனால் என்னால் வருமான வரி செலுத்தவில்லை என்று வருமான வரி துறையில் இருந்து சான்று பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது பட்டயக்கணக்கரிடம் இருந்து எனக்கு வருமானம் இல்லை என்றும் அதனால் நான் வருமானவரி தாக்கல் செய்யவில்லை என்றும் அதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனக்கு வலது கண் தான் பாதிப்பு என்றால் சரிதான். 09.05.2025 வரை எனக்கு மோட்டார் சைக்கிள் ஓட்டுவதற்கான உரிமம் நடைமுறையில் உள்ளது என்றால் சரிதான். என்னால் வண்டி ஓட்ட இயலவில்லை என்று குறிப்பிட்டு அதை சரண்டர் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த விபத்து நானே ஏற்படுத்திக் கொண்டது என்றும் அதனால் எனக்கு எந்தவித வருமான இழப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் எனக்கு வழங்கப்பட்ட குறிப்பாணையில் எத்தனை மருத்துவர்கள் என்னை பரிசோதனை செய்தாகள் என்றால் 3 மருத்துவர்கள் பரிசோதனை செய்தார்கள். அதற்கு பின்னிட்டு மருத்துவ கல்லூரிக்கு சென்று கண் மருத்துவர் பரிசோதனை செய்தார். அதில் எத்தனை பேர் எலும்பு முறிவு சிறப்பு நிபுணர் எத்தனை பேர் நரம்பு சிறப்பு நிபுணர் என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எது நிரந்த ஊணம் எது பகுதி நிரந்தர ஊனம் என்று எனக்கு வழங்கப்பட்ட மருத்துவ அறிக்கையான நீ.ம.சா.ஆ.1-ல் குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றும் அதனால் அது வழங்கிய மருத்துவரை விசாரிக்காத வகையில் அது ஏற்றுக் கொள்ள கூடியவை அல்ல என்று சொன்னால் சரியல்ல.

M DHANABAL
Digitally signed by M DHANABAL
Date: 2024.02.07 17:54:28 +0530

சார்பு நீதிபதி,
ஒட்டன்சத்திரம்